தமிழ்நாடு பள்ளிக்கல்வி ஆணையரின் செயல்முறைகள், சென்னை-6.

ந.க.எண்-573/எம்4/2022, நாள்- 21.03.2022.

பொருள்- உடற்கல்வி - 2021-22 ஆம் கல்வியாண்டில் 6 - 9 ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் மாணவ / மாணவிகளுக்கு உடற்கல்விக்கான பாடத்திட்டத்தின்படி விளையாட்டு மைதானத்தில் உடற்பயிற்சி வகுப்புகளை நடத்திட முதன்மைக் கல்வி அலுவலர்கள் மூலம் தலைமை ஆசிரியர்களும் நடைமுறைப்படுத்திட அறிவுறுத்துதல் - சார்பு.

பார்வை- 1. பள்ளிக் கல்வி ஆணையர் அவர்களது காணொளி காட்சி கூட்டம் நாள்-18.02.2022.
2. சென்னை-06, முதன்மை உடற்கல்வி ஆய்வாளர்(பொ) கடித எண்.057/ஆ1/2022, நாள்-10.03.2022.

******

பார்வையில் (1)-ல் கண்டுள்ளபடி ஆணையர் அவர்களது காணொளி காட்சி வாயிலாக 18.02.2022 அன்று நடைபெற்ற முதன்மை உடற்கல்வி ஆய்வாளருக்கான ஆய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டதிற்கிணங்க, பார்வை (2)-ல் முதன்மை உடற்கல்வி ஆய்வாளர் வழியாக பெறப்பட்டுள்ள கடிதத்தின்படி 2021-22 ஆம் கல்வியாண்டில் அனைத்து வகைப் பள்ளிகளில் 6 - 9 ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் மாணவ/மாணவியர்களுக்கான உடற்கல்வி பாடத் திட்டத்தின்படி விளையாட்டு மைதானத்தில் உடற்பயிற்சி வகுப்புகளை நடத்திடலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் நடப்புக் கல்வியாண்டில் 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ / மாணவியர்களுக்கான அரசு பொதுத் தேர்வுகள் நடைபெறவுள்ள நிலையில், இவ்வகுப்புகளைத் தவிர்த்து 6, 7, 8 மற்றும் 9 ஆகிய வகுப்புகளுக்குரிய பாடத்திட்டத்தின்படி பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகின்றமையால் இதே போன்று இவ்வகுப்பு மாணவர்களுக்கு உடற்கல்விக்கான பாடத்திட்டத்தின்படி விளையாட்டு மைதானத்தில் பயிற்சி வகுப்புகளை, தமிழக அரசின் கோவிட்-19 பாதுகாப்பு வழிமுறைகளைப் பின்பற்றி (SOP) மாணவர்களுக்கு உடற்கல்வி இயக்குநர் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்கள் மூலம் உடற்பயிற்சி வழங்குவதற்கு

அனைத்துப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தும்படி அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

24.3.22

பள்ளிக்கல்வி ஆணையருக்காக

பெறுநர்—

1. அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்
(மின்னஞ்சல் வழியாக).
2. முதன்மை உடற்கல்வி ஆய்வாளர் (பொ),
முதன்மை உடற்கல்வி ஆய்வாளர் அலுவலகம்,
கல்லூரி சாலை, சென்னை – 6.